மனமும் இளமையிற்றானே தத்துவப்பொருளை நாடி நிற்ப, இத்தாயுமானவரது அதிதீவரபக்குவத்தைக்கண்ட மௌனதேசிகரென்பார் வேதாகமங்களின் முடிவான தத்துவப்பொருளை இவர்க்கு உபதேசித் தருளினார். இவரும் அவ்வுபதேசப்பொருளைச் சிந்தித்துத் தெளிந்து, நாடோறும் தக்ஷிணாமூர்த்தி சந்நிதியிலே நிஷ்டை செய்துகொண்டு வருநாளிலே, தம் தந்தையார் தேகவியோகமாயினர். ஆதலும் அரசன் தாயுமானவர் தந்தையரினு மிகச்சிறந்தவரெனக் கேள்வியுற்று, இவரது வைதிகநிலையினை உணர்ந்திலனாய் கேடிலியப்பிள்ளையின் அலுவலில் இவரை யமர்த்தினன். இங்ஙனம் அமர்த்தப்பட்ட இவர் தம் திருவுளத்தைச் சிவத்தின்பாற் பதித்து லௌகிகத்தொழிலை நடாத்திவருகையில் இவரது மகிமைகளை அவ்வரசன் உணர்ந்தானாகி இவரை நோக்கி, தானிதுகாறும் தன் சேவையில் அமர்த்தி வைத்திருந்ததற்காக க்ஷமித்தருளும்படியாகவும், இனி நிஷ்டைக்குக் குறைநேராவண்ணம் நடாத்தியருளும்படியாகவும் வேண்டினன். பின்னர் தாயுமானவர் நிஷ்டையிலிருந்து குருவணக்கஞ் செய்துகொண்டிருக்குநாளிலே, தமையனார் வேண்டுகோளுக்கிசைந்து திருக்கலியாணஞ்செய்துகொண்டனர். பன்னியாரும் ஓராண் மகவைப் பெற்றுக்கொடுத்துக் காலம் ஆயினாராக, தாயுமானவரும் துறவியாய்க் கௌபீனத்தோடு சிவாலயங்களைத் தரிசித்தும் அற்புதத் தமிழ்ப்பாடல்களைப் பாடியும் சிலகாலங்கழித்துப் பின்னர் சிவபிரானது திருவடிநீழலைச் சேர்ந்தனர்.

| பதிகம். | பக்கம். |
|---|---|
| நினைவொன்று | அஅ |
| நின்றநிலை | உ௱ |
| பராபரக்கண்ணி | கசுஅ |
| பரிபூரணானந்தம் | ரு |
| பலவகைக்கண்ணி | உஉஅ |
| பன்மாலை | அரு |
| பாடுகின்றபனுவல் | உ௱ |
| பாயப்புலி | கஉசு |
| பெரியநாயகி | கசு0 |
| பெற்றவட்கே | கசுஉ |
| பைங்கிளிக்கண்ணி | ககஅ |
| பொருள்வணக்கம் | க |
| பொன்னைமாதரை | கக |
| மண்டலத்தின் | கஉச |
| மலைவளர்காதலி | கருரு |
| முகமெலாம் | கருக |
| மௌனகுரு | கக |
| வண்ணம் | உ௱எ |
| வம்பனேன் | க0எ |
| வேண்டாவோ வென் கண்ணி | உஉஎ |

எந்நாட்கண்ணியில்

| பதிகம். | பக்கம். |
|---|---|
| தெய்வவணக்கம் | உ0௩ |
| குருமரபின்வணக்கம் | உ0ச |
| அடியார்வணக்கம் | உ0ரு |
| யாக்கையைப்பழித்தல் | உ0ரு |
| மாதரைப்பழித்தல் | உ0சு |
| தத்துவமுறைமை | உ0எ |
| தன்னுண்மை | உக0 |
| அருளியல்பு | உக0 |
| பொருளியல்பு | உகஉ |
| ஆனந்தவியல்பு | உக௩ |
| அன்புநிலைமை | உகச |
| அன்பர்நெறி | உகசு |
| அறிஞருரை | உகஎ |
| நிற்குநிலை | உகஅ |
| நிலைபிரிந்தோர் கூடுதற்குபாயம் | உஉ0 |

நிற்றல்வேண்டுநிருவிகற்பச்சுகம்
பெற்றபேர்பெற்றபேசாப்பெருமையே. (௫௬)

பெருமைக்கேயிறுமாந்துபிதற்றிய
கருமிக்கையகதியுமுண்டாங்கொலோ
வருமைச்சீரன்பர்க்கன்னையொப்பாகவே
வருமப்பேரொளியேயுன்மனாந்தமே. (௫௭)

உன்மனிக்குளொளிர்பரஞ்சோதியாஞ்
சின்மயப்பொருளேபழஞ்செல்வமே
புன்மலத்துப்புழுவனபாவியேன்
கன்மனத்தைக்களைக்கக்கடவதே. (௫௮)

களையிலின்பக்கடலமுதேயிது
வளையினானுனைவந்துகலந்திலே
னுளையிலாவின்பமுள்ளவர்போலவித்
தளையிலேநடித்தேனென்னதன்மையே. (௫௯)

மையுலாம்விழிமாதர்கடோதகப்
பொய்யிலாழும்புலையினிப்பூளைகாண்
கையிலாமலகக்கனிபோன்றவென்
னையனேயெனையாளுடையண்ணலே. (௬௦)

அண்ணலேயுன்னடியவர்போலருட்
கண்ணினாலுனைக்காணவும்வாவெனப்
பண்ணினாலென்பசுத்துவம்போயுயும்
வண்ணமாகமனோலயம்வாய்க்குமே. (௬௧)

வாய்க்குங்கைக்குமௌனமௌனமென்
றேய்க்குஞ்சொற்கொண்டிராப்பகலற்றிடா
நாய்க்குமின்பமுண்டோநல்லடியளைத்
தோய்க்குமானந்தத்தூவெளிவெள்ளமே. (௬௨)

நீர்க்குமிழிபூணமைத்துநின்றுலுநில்லாமெய்
பார்க்குமிடத்திதன்மேற்பற்றறுவதென்நாளோ. (உ)

காக்கைநரிசெந்நாய்கழுகொருநாள்கூடியுண்டு
தேக்குவிருந்தாமுடலைச்சீயென்பதென்நாளோ. (ங)

செங்கிருமியாதிசெனித்தசென்மபூமியினை
யிங்கெனுடலென்னுமிழுக்கொழிவதென்நாளோ. (ச)

தத்துவர்தொண்ணூற்றறுவர்தாமாய்வாழிந்நாட்டைப்
பித்தனென்னும்பிதற்றொழிவதென்நாளோ. (ரு)

ஊனென்றிநாதனுணர்த்துமதைவிட்டறிவே
னென்றபாவிதலைநாணுநாளென்நாளோ. (சு)

வேலையிலாவேதன்விதித்தவிந்த்ரசாலவுடன்
மாலைவியாபாரமயக்கொழிவதென்நாளோ. (எ)

ஆழ்ந்துநினைக்கினரோசிகமாமிவ்வுடலில்
வாழ்ந்துபெறும்பேற்றைமதிக்குநாளென்நாளோ. (அ)

மும்மலச்சேறானமுழுக்கும்பிபாகமெனு
மிம்மலகாயத்துளிகழ்ச்சிவைப்பதென்நாளோ. (கூ)

நாற்றமிகக்காட்டுநவவாயில்பெற்றபசுஞ்
சோற்றுத்துருத்திசுமையென்பதென்நாளோ. (க0)

உருவிருப்பவுள்ளேதானூறுமலக்கேணி
யருவருப்புவாழ்க்கையைக்கண்டஞ்சுநாளென்நாளோ. (கச)

## மாதரைப்பழித்தல்.

மெய்வீசுநாற்றமெல்லாமிக்கமஞ்சளான்மறைத்துப்
பொய்வீசும்வாயார்புலையொழிவதென்நாளோ. (க)

திண்ணியநெஞ்சப்பறவைசிக்கக்குழற்காட்டிற்
கண்ணிவைப்போர்மாயங்கடக்குநாளென்நாளோ. (உ)

கண்டுமொழிபேசிமனங்கண்டுகொண்டுகைவிலையாக்
கொண்டுவிடுமானார்பொய்க்கூத்தொழிவதென்நாளோ. (ங)

உ

சிவமயம்.

முருகக்கடவுடுணை.

# அரும்பதவகராதி.

அசங்கம்-பற்றின்மை.
அசனி-இடி.
அணிமா-ஆன்மாவாதல்.
அணுபட்சம்-ஆன்மவர்க்கம்.
அண்டசம்-முட்டையிற்பிறவி
அத்துவா-கூட்டம்.
அத்துவிதம்-இரண்டன்மை.
அவசம்-பரவசம்.
அவித்தை-அஞ்ஞானம்.
அளவை-பிரமாணம்.
அனுசூதம்-தொடர்ச்சி.
ஆலம்பம்-பிடிப்பு.
ஆனாமை-கெடாமை.
இயமம் - கொல்லாமைமுதலி[ய.
இராவணாகாரம்-பயங்கரம்.
உபரதி-வெறுப்பு.
உபசாந்தம்-அமரிக்கை.
உபலம்-படிகம்.
உன்மனி-ஓர்சத்தி.
எழுநா-அக்கினி.
ஓலக்கம்-சபை.
ஔவியம்-பொறாமை.
கண்ணி-வலை.
கந்துகம்-கட்டுத்தறி.
கருப்பு-கரும்பு.
கவ்வை-பொறாமை.
கராக்கிரகம்-காவற்கூடம்.
கிள்ளாக்கு-அதிகாரம்.
குடிலம்-வஞ்சகம்.
குண்டலி-குடிலாசத்தி.
குத்திரம்-பொய்.
குளிகை-மாத்திரை.
கேவலம்-மறைப்பு.
கொட்டம்-அகந்தை.
கோசரம்-விஷயம்.
கௌவை-பழிமொழி.
சகலம்-நினைவு.
சங்கற்பம்-விருப்பம்.
சங்கேதம்-கட்டுப்பாடு.
சஞ்சிதம்-கட்டுப்பட்டவினை.
சடக்கை-தேகம்.
சதசத்து-ஆன்மா.
சதிர்-வல்லமை.
சபலம்-நன்மை.
சமாதி-நிஷ்டை.
சம்புபட்சம்-சிவவர்க்கம்.
சவி-காந்தி.
சாசுவதம்-கேடின்மை.
சாட்டை-கயறு.
சாந்தபதம்-ஒடுக்கநிலை.
சார்வாகன்-நாஸ்திகன்.
சாலம்பம்-பற்றுக்கோடு.
சாலேகம்-பலகணிவாயல்.
சித்தாந்தம்-முடிந்தமுடிபு.
சித்து-ஞானம்.
சில்-ஓடு.

சிற்சத்தி-ஞானசத்தி.
சேதா-தாய்ப்பசு.
சொச்சம்-நிர்மலம்.
சோங்கு-கப்பல்.
சோமவட்டம்-சந்திரமண்டலம்.
சௌபானம்-படி.
சூறை-கொள்ளை.
ஞாதுரு-ஆன்மா.
ஞானம்-அறிவு.
ஞேயம்-சிவம்.
தடத்தம்-அருகு, கரை.
தட்டு-வஞ்சகம்.
தாயகம்-தாய்வீடு.
தாரகம்-ஆதாரம்.
திகந்தம்-திக்கின்முடிவு.
திமிரம்-இருள்.
திரோதம்-மறைவு.
துரியம்-நான்காவதவத்தை.
தேசோமயம்-சோதியின்சொரூபம்.
நாதம்-தொனி. அதாவது இரண்டு கட்டைவிரலினாலே இரண்டு காதை மூடிக்கொண்டால் உள்ளேகேட்கும் ஒலி.
நிகளம்-சங்கிலி.
நிட்களம்-அருவம்.
நியமம்-தவமுதலிய.
நிரஞ்சனம்-தோஷமின்மை.
நிராமயம்-நோயின்மை.
நிராலம்பம்-பிடிப்பிலாமை.
நீலன்-குரூரன்.
நுழைவு-குகை.
நெட்டை-நெடுமை.
நேட்டு-வீண்.
பசுத்துவம்-பசுத்தன்மை.
பணதி-ஆபரணம்.
பரிபாகம்-பக்குவம்.
பவிசு-திறமை.
பவுரி-கூத்து.
பாதரசம்-இரசம்.
புட்கலம்-பரிபூரணம்.
பூரை - போதும், ஒன்றுமிலாமை.
பொத்தம்-ஒடுக்கம்.
போதம்-ஞானம்.
பௌதிகம்-பூதசம்பந்தம்.
மடிமை-குற்றம்.
மனு-விண்ணப்பம்.
முறி-எழுதுமோலை.
மூலக்கனல்-மூலாக்கினி.
மோனம்-மௌனம்.
வட்டு-சூதாடுகருவி,வெல்லம்
வாச்சியம்-சொற்பொருள்.
வாரம்-அன்பு.
வாசாயம்-பொய்.
விகசித்தல்-மலர்தல்.
விகற்பம்-வெறுப்பு.
விதண்டை-மாறுபாடு.
விடக்கு-மாமிசம்.
விந்து-ஸ்வரம், வர்ணம், நிவர்த்திகலை முதலிய கலைகளை தோன்றியொடுங்குமிடம்.
விபுலம்-விசாலம்.
வியோமம்-ஆகாயம்.
விலாழி-யானைக்கையுமிழ்நீர்.
வெட்டு-கடுமை.
வேதாந்தம்-மறைமுடிவு.